DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 243/2025 |
| Session | ... | |
| | | Prosecution / PW-3 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.பால்சாமி |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ. அனந்தப்பன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A1,A2 present.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 11.12.2025

---

**முதல் விசாரணை**

1. நான் தற்போது ஆதியாக்குடியில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி ஆவார். அ.சா.2 எனது மகன் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனது மனைவி கால் தடுமாறி கீழே விழுந்ததில் தலையிலும், காலிலும் காயம் ஏற்பட்டு அதறக்ாக திருவாடானை அரசு மருத்துவமனயில் சிகிச்சைபெற்றார். வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சி அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவித்து விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது அவ்வாறு சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1.கடந்த 02.11.2023 தேதி காலை சுமார் 9 மணியளவில் நானும் எனது மனைவியும், மகனும் வீட்டில் இருந்தோம். எனது மகன் சென்னையில் இருந்தபோது சரண்யா என்பவருடன் பழக்கம் இருந்தது. ஆனால் அந்த உறவு முறிந்து அவன் வீட்டிற்கு வந்துவிட்டான். அவருக்கு வேறு பெண் பாாத்து கொண்டிருந்தோம். இதை தெரிந்த சரண்யாவின் அப்பாவான எதிரி பூமிநாதனும் மாமாவான எதிரி முத்துமாணிக்கமும் எங்கள் வீட்டிற்கு வந்து எங்களை பார்த்து கெட்டவார்த்தையால் அசிங்கமாகபேசி என் மகளை விட்டுவிட்டு வேறு ஒருபெண்ணை எப்படி திருமணம் செய்யலாம் என்று கேட்டு பிரச்சனைசெய்தார்கள் என்றால் சரியல்ல.

2.எதிரிகள் இருவரும் கருவேல்கம்பை எடுத்து என் மகனை தாக்குவதற்காக எறிந்தபோது எனது மனைவி இடையில்வந்ததால் அவரது தலையில் பட்டு இரத்த காயமும் வலது கணுக்காலில் இரத்த காயமும் ஏற்பட்டது என்றால் சரியல்ல. இதை பார்த்து கொண்டிருந்த ஆரோக்கியமேரி அவர்கள் இருவரையும் விலக்கி விட்டார்என்றால் சரியல்ல.

3.இதுசம்மந்தமாக மேலேசொன்ன விவரங்களை போலிசார்என்னை விசாரித்தபோது சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4.எதிரிகளுடன் சமரசமாக சென்றுவிட்டேன் என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>**

(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லாததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது)

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.